24th July 1962]

பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளை அபி விருத்தி செய்ய 'பிளானிங் கமிஷன்' யோசனைப்படி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இராமநாதபுரம் ஜில்லா தனியாகப் பரிசீலனை செய்யப்பட்டது. அங்கு ஜமீன் பிராந்தியம் இருக்கிறது. அதெல்லாம்கூடப் பரிசீலனை செய்யப்பட்டது. அங்கு சில திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன அபிவிருத்தி, மின்சார அபி விருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதே மாதிரி திருநெல்வேலியில் தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் போன்றவை எல்லாம்—அந்தப் பகுதி பிற்போக்காக இருக்கிறது என்ற முறையில்தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேறு சில பிரச்னைகளும் கவனிக்கப்பட்டிருக்கின்றன. சிலோனிலிருந்து வந்தவர்களைப் பற்றி எல்லாம்கூட ஆலோசிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தப் பகுதிகள் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றனவோ, அவை பற்றி விசேஷ கவனம் செலுத்தப்பட்டு, உரியதிட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலுகா இதுவரை ஜமீன் பிராந்தியமாக இருந்ததால், மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. இதையும் அந்த இனத்தில் சேர்த்து முன்னுக்குக் கொண்டுவர முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான், ராமநாதபுரம், திருநெல்வேலி என்று சொன்னால், மற்ற மாவட்டங்கள் கவனிக்கப்படவில்லை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. குறிப்பாகக் கேள்வி கேட்டிருந்தால் இது பற்றிய அறிக்கை ஒன்றை சபை முன் வைத்திருக்க முடியும். பழனி தாலுகா, ஆண்டிப்பட்டி பிளாக், நீலகிரி பிளாக், என்று எல்லாப் பகுதிகளையும் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : மற்றப் பகுதிகளைவிடக் கிழக்கு ராமநாதபுரத்திற்கு விசேஷமாகச் செய்யப்பட்ட சலுகைகள் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திட்டத்தில் சலுகை ஒன்றும் கிடையாது. என்னென்ன திட்டங்கள் அந்தப் பகுதியில் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைப் பகுதியில் என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போடவேண்டும்.

ரோடு ரோலர்கள் (நீலகிரி மாவட்டம்)

* 569 கேள்வி—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் எத்தனை ரோடு ரோலர்கள் இருக்கின்றன ?

(இ) அவைகளில் எத்தனை பழுதடைந்திருக்கின்றன ?

THE HON. SRI. V. RAMAIAH : (*a*) Twelve.

(*b*) Two.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த ரோடு ரோலர்கள் அடிக்கடி பழுதடைந்து போகிறது என்றும், அவற்றை ரிப்பேர் செய்ய 'ஸ்பேர் பார்ட்ஸ்' கிடைப்பதில்லை என்றும் காரணத்தைச் சொல்லிக்கொண்டு பல மாதக் கணக்காக அவை ரோடுகளில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. அந்த ஸ்பேர் பார்ட்ஸ் உடனடியாகக் கிடைக்க என்ன வழி வகைகள் செய்யப் பட்டிருக்கின்றன ?

[24th July 1962

கனம் திரு. வெ. ராமையா : ஸ்பேர் பார்ட்ஸ் எவ்வளவு அதிகமாக வாங்க முடியுமோ அதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. சில ஸ்பேர் பார்ட்ஸ் வெளி தேசத்திலிருந்து வரவேண்டி இருப்பதால், 'ஃபாரின் எக்ஸ்சேஞ்சு' கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. அதனால் சிறிது கால தாமதமாகலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலில் நீலகிரி ஜில்லாவுக்கு 12 ரோடு ரோலர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைக்கு அந்த ரோலர்கள் தேவைப் படும் காரணத்தால் கிராமப் புறங்களில் இருக்கும் ரோடுகளுக்கெல்லாம் அந்த ரோலர்கள் கிடைப்பதில்லை. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ரோடு ரோலர் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதிகமாக ரோலர்கள் வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட இலாகாகள் அதற்குவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண் டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் வேலைகள் நடக்க வேண்டிய அவசியம் குறித்துத்தான் 12 ரோலர்கள் நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில் தனியாகக் கவனம் செலுத்தப்படும்.

சினிமா கொட்டகைகள் (கார் நிற்க வசதி)

* 570 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதியமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மோட்டார்கார்கள் நிறுத்தி வைக்க இடவசதி செய்ய வேண்டுமென சென்னையிலுள்ள சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கு அரசாங்கம் உத்திரவிட்டதா ?

(இ) இந்த உத்தரவு இதர மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க உத்தேச முண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) No, Sir.

திருவாடுதுறை ஆதீனப் பண்ணை நிலங்கள்

* 571 கேள்வி.—**திரு. கோ. சி. மணி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவாடுதுறை ஆதீனம் தங்களிடம் வைத்திருந்த பண்ணை சாகுபடி நிலங்களை விவசாயி அல்லாதாருக்கும் தங்களுக்கு வேண்டியவர் களுக்கும், பினாமி, குத்தகைச் சீட்டுக்கள் எழுதிக்கொடுப்பது அரசாங்கத் திற்கு தெரியுமா ?

(இ) அப்படியானால், அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) No Sir,

(இ) Does not arise.

Beedi Workers (minimum wages)

*** 572 *Q.*—Sri M. KALYANASUNDARAM (on behalf of Sri K. A. MATHIALAGAN) Will the Hon. the Minister for Finance be pleased to state the safeguards guaranteed to the beedi workers to get their minimum wages from those who evade the mandatory provisions of the various labour laws ?**